International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 05 Issue: 01 January to March 2023 www.irjtsjournal.org

# வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் திருக்குறள்

இளஞ்சைவப்புலவர். திரு.ஜீ.பால்ராஜ்

*விரிவுரையாளர்*

*இந்துநாகரிகத்துறை*

*கிழக்குப்பல்கலைக்கழகம் இலங்கை.*

***ஆய்வுச்சுருக்கம்***

*சங்கமருவியகாலத்தில் எழுந்த நீதிநூலே திருக்குறளாகும் இதனை திருவள்ளுவர் படைத்தருளியுள்ளார். இந்நூல் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் முப்பாலின் ஊடாக விளக்குகின்றது 133 அதிகாரங்களையும் 1330 குறட்பாக்களையும் கொண்டு விளங்கும் திருக்குறளானது மனிதன் வையத்துள் வாழ் வாங்கு வாழ்வதற்கு தேவையான அன்பு, அறம், மனத்தூய்மை கற்றலின்மேன்மை விருந்தின் மாண்பு என அனைத்து விடயங்களையும் திருக்குறள் தெளிவாக எடுத்துரைக்கின்றது அற நெறிக்காலத்தில் எழுந்ததால் வெறுமனே அறத்தினை மட்டும் திருக்குறள் போதிக்கவில்லை அறத்தோடு கூடிய வாழ்க்கையை வாழ்வதற்கான வாழ்வியல் சிந்தனைகளை தெளிவாக மனிதகுலத்திற்கு போதிக்கிறது. மனிதன் மண்ணில் நல்ல வண்ணம் வாழ, திருக்குறள் போதிக்கும் வாழ்வியல் சிந்தனைகளை இனங்கண்டு அதனை விளக்குவதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும் இவ்வாய்வுக் கட்டுரையானது வரலாற்று ஆய்வு, விபரணபகுப்பாய்வு ஆகிய ஆய்வு முறைகளின் ஊடாக ஆய்வு செய்யப்படுகின்றது*

***திறவுச்சொற்கள்:*** *திருக்குறள், வையகம், வாழ்வியல், அன்பு, வழிகாட்டுதல்*

## அறிமுகம்

உலகமக்கள் அனைவருக்கும் பொதுவாய் நின்று நன்னெறி புகட்டும் அருமறை நூல் திருக்குறளாகும். தமிழ் மொழியில் எழுதப்பட்ட இந்நூல்வேறு பலமொழிகளிலும் மொழி பெயர்க் கப்பட்டுள்ளமை குறிப்பிடற்குரியது. மானிட சமூகத்திற்கு திருவள்ளுவர் தந்திருக்கின்றஞான நன் கொடையான திருக்குறள், நன்னெறியில் வாழ்வதற்குத் தேவையான விடயங்களை திறம் பட எடுத்துரைக்கின்றது. இதனால் தான் பெரியார் கூட, மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான உயர்ந்த நெறிகளையும், மனிதனிடம் மனிதன் நடந்து கொள்ளும்

முறையையும் எடுத்து கூறும் அருமையான நூல் திருக்குறளைத் தவிரவேற எந்த நீதி நூலும் இருக்க முடியாது என்கின்றார்.

**'வாழ் வாங்கு வாழ்தல்'** என்பது, பிறரிடத்தில் அன்பு செலுத்தி, ஏற்றத்தாழ் வின்றி அனைவரையும் சமமாகமதித்து நல்வழியில் வாழ்ந்து, ஏனையவர்களையும் வாழவைப்பதே ஆகும். **'அரிது அரிது, மானிடராய் பிறத்தல் அரிது'** என ஔவையார் மனிதப் பிறப்பின் மகத்துவத்தைப் பாடிவைத்துள்ளார். அரிதான மனிதப் பிறவியை மண்ணுலகில் எடுத்த நாம் மனிதத்தோடு வாழ்ந்தால், மறைந்தாலும் கூட மரணமில்லை. மக்கள் மனங்களில் என்றும் வாழ்ந்து கொண்டிருப்போம். இன்று பெரும்பாலும் மனித மனங்களில் அன்பு, ஒற்றுமை, கொடை, மற்றவரை மதித்தல் போன்ற நற்பண்புகள் மறைந்து கோபம், பொறாமை, பழிவாங்குதல் முதலான குரோதப் பண்புகளே மலிந்து கிடக்கின்றன. இதனால் சமூகத்தில் மனிதநேயம், மனிதாபிமானம் என்பனவற்றை கண்டு கொள்வது மிக மிக அரிதாகவே உள்ளது.

இந்நிலை ஏற்படக் காரணம் சான்றோர்களையும், அவர்கள் காட்டிய வாழ்க்கை முறையையும் பின்பற்றாமையே ஆகும். இயந்திர உலகில் உழலும் மக்கள் அதனுள் மூழ்கி இலக்கியப் பாரம்பரியத்தை மறந்து விடுகின்றார்கள். இதனால் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியலுக்கான வழிமுறைகளை அவர்கள் பெற்றுக் கொள்ளத வறுகின்றார்கள். திருக்குறள், மனித வாழ்க்கைக்கான சிறந்த பாதையாகவும், வாழ்க்கையை தொலைத்து விட்டு அதனைத் தேடுகின்றவர்களுக்கு ஒரு கலங்கரைவிளக்கமாகவும் அமைந்து காணப்படுகின்றது.

அன்புநெறி, அறம், கருணை, கல்வி, விருந்தோம்பல் விலக்கப்பட வேண்டியப பஞ்சமாபாதகங்கள், இன்னா செய்யாமை, உண்மை உரைத்தல் மனித நேயம், சமூக ஒருமைப்பாடு முதலிய வாழ்வியல் அம்சங்களை மனித சமூகத்துக்கு மிகத்தெளிவாக இந்நூல் எடுத்துரைக்கின்றது. இவற்றைப் பின்பற்றினாலே வாழ்க்கை அறமாக அமையும் என்பது உறுதி.

### அன்பு நெறி

மனித வாழ்க்கையில் அன்பு முக்கியமான அறமாகும். பிறரிடத்திலும், ஏனைய உயிர் களிடத்திலும் நாம் அன்பு செலுத்தி வாழ வேண்டும். அவ்வன்பே இறைவனையும் அடையச்செய்யும். ஏனெனில் எல்லா உயிர்களிடத்திலும் இறைவன் உறைகிறான். இதனால் உயிர்களை நேசிப்பது இறைவனை நேசிப்பதற்குசமமாகும். இத்தகைய அன்பினால் பொதிந்து வாழும் வாழ்க்கையே ஆன்மீக வாழ்க்கையாகும். திருமூலர் கூட **'அன்பே சிவம்'** என்கின்றார். சுவாமிவிவேகானந்தர் **'அன்பே கடவுள்'** என்றார். கௌதமபுத்தர் 'அன்புதான்



© 2023, IRJTSR 

உலகமகாஜோதி' என்றார். அன்பு இல்லாதவர்களின் வாழ்க்கை இருள் நிறைந்ததாகவே காணப்படும். ஆனால் அன்பு உள்ளவர்களின் வாழ்க்கையில் எப்போது இறையருள் நிறைந்து நிற்கும். அன்னைதெரேசாவும் '**இறக்கத்தான் பிறந்தோம் அது வரையும் இரக்கத் தோடு இருப்போம்** என்று மானிடர்களுக்கு எடுத்துரைத்தமை இங்கு நினைவூட்தக்கது.

திருவள்ளுவரும் வாழ்வில் அன்பின் முக்கியம் கருதி திருக்குறளில் '**அன்புடைமை** எனும் தனி அதிகாரத்தையே அமைத்துள்ளார். அன்பு வழியில் பயணிக்கும் ஒருவனுடைய வாழ்க்கை பயணமே இறுதி இலக்கை அடைவதோடு நிறைவு பெற்ற பயணமாகவும் அமைகின்றது என்று கூறுகின்றார். வாழ்க்கையில் அன்புடன் வாழ்ந்தால் நாம் நமக்காக மட்டு மன்றி பிறருக்காகவும் வாழ்வோம். அப்போது எம்மில்சுய நலம்மறைந்து பொதுநலமே கூடுதலாக வெளிப்படும். இது அனைத்துயிர் மீதானகருணையை ஏற்படுத்தும். உள்ளத்தில் அன்பு இல்லாதவர்களின் வாழ்க்கையானது, வள மற்ற பாலை நிலத்தில் பட்ட மரம் தளிர்த்தாற் போன்றது. என்பதனை வள்ளுவர்,

'**அன்பகத்தில்லாஉயிர் வாழ்க்கைவன்பாற்கண்**

**வற்றல் மரந்தளிர்த்தற்று** என்ற குறள் மூலமாக எடுத்தியம்புகிறார்.

தனி மனிதனாக வாழும்போது மட்டுமல்லாது, குடும்பமாகவாழும் போதும் அன்பு வேண்டும். இல்லறம் நல்லறமாக அமைய வேண்டுமானால் தனது மனைவி, பிள்ளைகள் மட்டு மல்லாது சகலரிடத்திலும் அன்பு கொண்டவனாக இல்லறத்தான் விளங்க வேண்டும். அப்போது தான் இல்லறம் நல்லறமாக அமையும் என திருக்குறள் வழிகாட்டுகிறது. இதனை,

'**அன்பும்அறனும்உடைத்தாயின்இல்வாழ்க்கை**

**பண்பும்பயனும்அது'** எனும் குறட்பா தெளிவு படுத்தி நிற்கின்றது.

அன்பு கொண்டவர்களிடமே ஏனையவர்களும் அன்புகாட்டுவார்கள். அன்பு இல்லாதவர்கள் அகதியாகவே இருப்பார்கள். அகத்தினில் அன்பு நிறைந்திருந்தால் முகத்தினில் எப்போதும் புன்னகையே இருக்கும். உள்ளத்தில் அன்பு இல்லாத மாந்தர்களுக்கு புறத்தே இருகின்ற உறுப்புக்களால் எந்தப் பயனுமில்லை. என்பதனை,

'புறத்துறுப்புபெல்லாம்எவன்செய்யும்யாக்கை

**அகத்துறுப்புஅன்பிலவர்க்கு** என்ற குறட்பா எடுத்தியம் புகிறது.

ஆகவே, மனிதவாழ்க்கை முழுமையடைய அன்பு அவசியம் என்பதை மானிடர்களுக்கு தெளிவாக வள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

## கல்வி

மனிதன், வாழ்க்கையின் தத்துவங்கள் அனைத்தையும் கல்விவாயிலாகவே பெற்றுக் கொள்கின்றான். கல்விபாமரனையும் பண்புள்ளவனாக மாற்றுகிறது. கல்வியின் மகத்துவத்தையும், வாழ்வியலில் அதுமனிதனுக்கு வழிகாட்டும் பக்குவத்தினையும் வள்ளுவப் பெருந்தகையும் எடுத்துரைகிறார். ஒழுக்க விழுமியங்களை கல்வியாக கற்ற ஒருவன் அதற்கேற்ப வாழ்வானாக இருந்தால், அவனுக்கு அவன் கற்ற கல்வியே சிறந்த வாழ்வியலுக்கான வழிகாட்டியாக அமையும் என்பதனை,

**'கற்க கசடறக் கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்குத் தக** என்ற குறள் மூலமாக எடுத்துரைத்துள்ளார்.

கற்றறிந்த ஒருவன் தான் பெற்ற கல்வியை மற்றவர்களுக்கும் வழங்கி அவர்களையும் நல்வழிப்பாதைக்கு இட்டு செல்வான். அத்தகைய கல்வியே அவனுக்கு பெருஞ்செல்வமாக அமையும். ஏனையவை எல்லாம் செல்வமாக அமையாது என்பதனை,

**'கேடில்விழுச்செல்வம் கல்வியொருவற்கு**

**மாடல்ல மற்றையவை** என்கிறார்.

எனவே, கல்விச் செல்வமே அழியாச் செல்வமாகும் என்பதனை புரிந்து கொண்டு கல்வியை கைவிடாது கற்று அதன் படிவாழ்ந்தால் வாழ்க்கை சிறக்கும் எனவள்ளுவர் அறிவுரை கூறுகின்றார்.

## விருந்தோம்பல்

வீட்டிற்குவருகின்ற விருந்தினர்களை எந்தவிதபேதமும் கருதாமல் இன்முகத்துடன் வரவேற்று உணவளிப்பதே சிறந்த விருந்தோம்பல் பண்பாகும். இப்பண்பானது மனித நன் நெறியைக்துலக்குவதோடு அவனது வாழ்வியலையும் செப்பனிடுகிறது. 'பரமனுக்கு உணவுபடைப் பதைவிட பாமரனுக்கு உணவு கொடுத்து அவன் பசியைபோக்கினால் அது பரமனுக் கேபடைத்ததற்கு நிகராகும்'. நாம் உண்ணும்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

போது கூடயாராக இருந்தாலும் அவர்களுக்கு ஒரு பிடி உணவினை கொடுத்து உண்பதுவே அறம். இதனையே, திருமூல நாயனாரும் '**யாவர்க்குமாம்உண்ணும்போதொருகைப்பிடி**' என்றுரைத்தார்.

வள்ளுவப் பெருமகனாரும் விருந்தோம்பு வதனால் ஏற்படும் நன்மைகள் பற்றி மானிட சமூகத்துக்கு தெளிவாக புலப்படுத்துகிறார். நமது மனைக்கு பசியாறவருகின்றவரின் அகமும் முகமும்மலர அவர்தம் பசிப் பிணிதீர்த்து அனைவருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்துபவன் இல்லத்திலே திருமகள் நிரந்தரமாகவே தங்கிவிடுவாள் என்று கூறுவது அவதானிக்கத்தக்கது இதனை,

'**அகனமர்ந்துசெய்யாள்உறையும்முகனமர்ந்து**

**நல்விருந்துஒம்புவான்இல்**' என்றும்

பூவுலகில் விருந்தோம்பல் பண்பினை தவறாது விழைந்து செய்யும் இல்லறத்தான் வானத்தவர்க்கும் (தேவருக்கும்) நல்விருந்தாவான் எனும் விருந்தோம்பலின் மாண்பினை,

'**செல்விருந்துஒம்பிவருவிருந்து பார்த்திருப்பான்**

**நல்விருந்துவானத்தவர்க்கு**' எனும் குறள் மூலம் எடுத்துரைக்கிறார்.

இல்லம் நாடிவருகின்ற ஏழைகளும் விருந்தினர்களேயாவர். அவர்களுக்கு ஒரு வேளையாவது உணவளித்து அவர்களின் பசியை போக்கினால் அதைவிடச்சிறந்த அறம் எதுவுமில்லை. ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்.

**பஞ்சமாபாதகங்களைகடிதல்**

கொலை, களவு, பொய், கள்ளுண்ணல், பிறர்மனை நயத்தல் ஆகிய பஞ்சமாபாதகங்களை கை விட்டு வாழ வேண்டும். அவ்வாறு வாழ்ந்தால், மனிதவாழ்க்கை அமைதியாகவும், நேர்பாதையில் அமையும் என்பது திண்ணம். இன்றைய உலகில் மதுவுக்கு அடிமையாகி தங்களுடைய வாழ்க்கையை தொலைத்தவர்களே அதிகமானவர்கள். குடிப்பழக்கம் உடையவர், தம் அறிவை இழந்து விடுவர். உடல் நலம் பாதிக்க கப்படும், உள நலமும் பாதிக்கப்படும், பொருள் நலனும் கெட்டுப்போகும். அனைத்தும் கெடுவதால் அவரை நம்பி இருக்கும் குடும்பமும் அவதியுறுகிறது. இதனால் தான் குடி குடியைக்கெடுக்கும் என்பார்கள். இரவு, பகல் பாராமல் எந்த நேரத்திலும் மது அருந்து பவர்கள் எக்காலத்திலும் பிறரால் மதிக்கப் படமாட்டார்கள். இதனை,

'**உட்கப்படாஅர் ஒளியிழப்பர்எஞ்ஞான்றும்**

கட்காதல்கொண்டொழுகுவார்

என்று வலியுறுத்திக் கூறுகின்றார்.

பிறர்மனை மீது கொள்ளும் அளவற்ற ஆசையும் ஒருவனது வாழ்க்கையை அழித்துவிடும். ஒரு பெண்னைதாயாக, உடன் பிறந்தச கோதரியாக நினைக்க வேண்டும். அதனை விடுத்து காமத்தின் பால் செல்வானாக இருந்தால் அவன் சான்றோனாக இருந்தும் பயனில்லை, உயிர் வாழ்ந்தும் பயனில்லை என்று எடுத்துரைக் கின்றார் வள்ளுவர். விவேகானந்தரும் ஒரு வருடைய வாழ்வு நலமானதாக அமைய வேண்டு மானால் ஒருவன் தன் மனைவியை தவிர மற்றைய பெண்களைதன் தாயைப் போல் நோக்க வேண்டும் என்று அறிவுரை கூறுகின்றார். திருவள்ளுவர், கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் வாழ்வாங்குவாழும் மனிதன்யார் என்றால், அடுத்தவனுக்கு உரிமையானவளை அடைய வேண்டும் என்று நினைக்காதவனே ஆவான் என்கிறார். இதனை,

'நலக்குரியார்யாரெனின்நாமநீர் வைப்பின்

**பிறர்க்குரியாள்தோள்தோயாதார்'** எனும் குறள் மூலமாக உணர்த்துகிறார்.

எனவே மனித வாழ்க்கையில் ஒழுக்க சீலனாகவும், மிருகமாக அன்றி மனிதனாகவும் வாழ பஞ்மாபாதகங்களை கை விடல் சாலச்சிறந்ததாகும்.

## மனத்தூய்மை

மனிதமனம் சாத்வீகமாக இருந்தால் வாழ்க்கை சாந்தமாக அமையும். தூய்மையான மனதில் அன்பு, மனிதாபிமானம், ஈகை முதலிய நற்பண்புகள் குடி கொண்டிருக்கும். தூய்மையாக இருக்கும் மனம் தூயபாதையினையே தேர்ந்தெடுக்கும் என்பது திண்ணம். பணத்தில், பதவியில் உயர்ந்தவனாக இருப்பினும் மனம் சுத்தமாக இல்லா விட்டால் அவன் மாண்பு மிக்க மனிதனாக விளங்க மாட்டான். அறம் அவனை விட்டு விலகியே நிற்கும். இவ்வாறு விலகுவதால் மற்றவர்கள் கூட அவனை மாண்டவனாகத்தான் நோக்குவர். எனவே, மனத்தூய்மை என்பது மனித வாழ்வின் அத்திபாரமாக அமைகிறது. மனம் தூய்மையாக இருந்தால் மலர் கொண்டு கூட இறைவனை வணங்கத் தேவையில்லை. ஏனெனில் கள்ளம் கபட மற்ற உள்ளத்தையே இறைவனும் விரும்புகின்றான். இதனையே சுவாமிவிபுலாநந்த அடிகளார்,

'வெள்ளைநிறமல்லிகையோவேறெந்தமாமலரோ
வள்ளல் அடியிணைக்குவாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப்பூவுமல்லவெறெந்தமலருமல்ல

**உள்ளக்கமலமடிஉத்தமனார்வேண்டுவது**

என்ற வாறுமனத் தூய்மையின் மாட்சிமையைப் பாடியுள்ளார்.

வள்ளுவப் பெருந்தகையும் வாழ்க்கை அறத்தின் வழியில் வழுவாது பயணிப்பதற்கு மனத்தூய்மை என்பது மிக அவசியம் எனமக்களுக்கு போதிக்கின்றார். இதனை,

**'மனத்துக்கண்மாசிலன் ஆதல் அனைத்தறன்**

**ஆகுல நீர பிற'** எனும் குறட்பா எடுத்துரைக்கின்றது.

மனம் தூய்மையாக இருப்பதே சிறந்த அறமாகும். மனத்தூய்மையுடன் வாழ்ந்தால் வாழ்க்கை வளமானதாக அமையும் என திருக்குறள் வழிகாட்டி நிற்கிறது.

## முடிவுரை

தொகுத்துக் காணும் போது, மிகச் சிறந்த நீதி இலக்கியமாக தமிழ் இலக்கியப் பரப்பில் இடம் பிடித்த திருக்குறலானது, மானிட வாழ்வின் மேன்மைக்கு முன்வைக் கின்ற சிந்தனைகள் இன்றுவரை பொருத்த முடையனவாகவே விளங்குகின்றன. கல்லைச் சமைத்தால் அதுகண்கவர் சிலையாகிறது. அரிசியைச் சமைத்திட அதுவே உயிர்க்குறுதி பயக்கும் அடிசில் ஆகிறது. இவ்வாறே, மனித மனத்தைச் சமைத்தால் அதுவே தெய்வீகமாய் மலரும். 'நஞ்சை உண்ண நினைப் பவன்கள்ளை அருந்தட்டும்' என்ற வள்ளுவர், அன்புடைமையின் அவசியம், கற்றலின் மேன்மை, விருந்தின்மாண்பு, மனத்தூய்மை, உண்மை, கருணை, அறம், இன்னா செய்யாமை, இனியவை உரைத்தல் என்றவாறு எம்வாழ்வுக்குக் காட்டி நிற்கும் அகல் ஒளிதீபத்தில் எம்வாழ்வை வகுத்துக் கொண்டால் நாமும் தெய்வீக நிலை எய்துவோம் என்பது திண்ணம்.

## உசாத்துணைநூல்கள்


[1] பெரியசாமி.மு.பெ.மு.,(2012), 'திருக்குறள்மிகமிகஎளியஉரை'இஸ்ரீஇந்துபப்ளிகேஷன்ஸ்.

[2] தனலெட்சுமி.இரா.ம.,(2007), வள்ளுவர் காட்டும் வாழ்வியல் கூறுகள்', வாழ்வியல் பெட்டகம், கலைஞன் பதிப்பகம் – சென்னை

[3] பால்ராஜ்.ஜீ.,(2019), 'கம்பராமாயணத்தில் அறச்சிந்தனைகள் – திருவடிசூட்டுபடலத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு', தமிழ் இலக்கியங்களில் அறமும் அருளும்-தொகுதி2, தமிழ்த்துறை (அரசுஉதவி) என்.ஜி.எம்கல்லூரி - பொள்ளாச்சி.

[4] பால்ராஜ்.ஜீ., கேசவன்.எஸ்.,(2019), 'திருமந்திரம்புகட்டும் வாழ்வியல் நெறி' இபன் நோக்குப்பார்வையில் இலக்கண இலக்கியங்கள், புனித அந்தோனியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி-திண்டுக்கல்.

[5] இராமலிங்கம்.அ.,(2003), 'ஒழுக்கம்'இபாரதிபுத்தகாலயம்-சென்னை.